DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. O.S.No.108/2017

Prosecution side witness for D.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | ...திரு. உதய சூரியன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.03.2025.**

முதல்விசாரணை:–

நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை பெற்று அதன்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். நான் எங்கு குடியிருந்து வருகிறேன். என்றால் சோமநாதபுரம் உடன்குடியில் குடியிருந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி கிளாட்வினை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனக்கு உறவு என்றால் அண்ணன் மகன். கிளாட்வின் எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் சோமநாதபுரம். கிளாட்வினின் அப்பா பெயர் என்னவென்றால் ஞானபாண்டியன். ஞானபாண்டியனின் அப்பா பெயர் என்னவென்றால் ஞானமுத்து நாடார். ஞானமுத்து நாடாரின் அப்பா பெயர் என்னவென்றால் பிச்சமுத்து நாடார். ஞானமுத்து நாடார் உயிருடன் இருந்த சமயத்தில் ஏற்பாடு எதுவும் செய்து வைத்தாரா என்றால் அவர் அவரது மகன்கள் நால்வருக்கும் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்தார். எந்த தேதியில் மேற்படி உயில் ஆவணம் எழுதப்பட்டது என்றால் 30.01.1990. அந்த உயில் ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியும் என்றால் மேற்படி உயில் ஆவணத்தை எழுதி பதிவு செய்யும்பொழுது நான் போயிருந்தேன். நான் யாருடன் போயிருந்தேன் என்றால் ஞானமுத்து நாடாருடன் போயிருந்தேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ–2 ஆவணம் என்ன ஆவணம் என்றால் ஞானமுத்து நாடார் எழுதிக்கொடுத்த உயில் ஆவணம் ஆகும். இந்த உயில் ஆவணத்தில் ஞானமுத்து நாடார் கையெழுத்து எதுவும் போட்டாரா என்றால் கையெழுத்து போட்டார். மேற்படி உயில் ஆவணத்தில் யார் யாரெல்லாம் கையெழுத்து போட்டார்கள் என்றால் சாட்சிகளாக தேவதுரை, பொன்னம்பல நாடார் ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து போட்டார்கள். ஞானமுத்து நாடார் உயிலில் கையெழுத்து போடும்போது யார் யாரெல்லாம் அங்கு இருந்தார்கள் என்றால் ஞானமுத்து நாடார், நான், தேவதுரை, பொன்னம்பல நாடார் ஆகியோர்கள் இருந்தோம். சாட்சிகள் கையெழுத்து போடும்போது யார் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் தேவதுரை, பொன்னம்பல

நாடார், ஞானமுத்து நாடார், நான் ஆகியோர் இருந்தோம். மேற்படி ஆவணத்தில் சாட்சிகள் கையெழுத்திடும்போது, யாரும் பார்த்தார்களா என்றால் நாங்கள் நால்வர் இருந்தோம். ஒவ்வொருவர் கையெழுத்து செய்வதை மற்றொருவர் பார்த்தோம். ஞானமுத்து நாடார் எனக்கு உறவினரா என்றால் துாரத்தில் பெரியப்பா முறை வேண்டும். சோமநாதபுரம் ஊரில் நான் ஏதாவது பொறுப்பில் இருந்தேனா என்றால் ஊர்தலைவராக இருந்தேன். எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை இருந்தேன் என்றால் 2000 முதல் 2010 வரை இருந்தேன். மேற்படி காலகட்டத்தில் அருள்மிகு சோமநாதசாமி மற்றும் முத்தாரம்மன் கோவிலை நிர்வகித்து வந்தார்கள் என்றால் 2010 வரை நான்தான் கோவிலை நிர்வகித்தேன், 2010 க்கு பிறகு 1 ம வாதி சாமிதுரை என்பவர் நிர்வகித்து வருகிறார்.

<u>குறுக்குவிசாரணை (வாதிதரப்பில்)</u>

தற்போது என்ன வயதாகிறது என்றால் 64 வயது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பி.வா.சா.ஆ–2 ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–2 ல் எந்த சாட்சிகளின் கையொப்பமும் அதில் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–2 ஆவணத்தை என்னால் தற்சமயம் கண்பார்வை சரியில்லாததால் வாசிக்க இயலவில்லை. 1990 ஆம் ஆண்டு ஞானமுத்து நாடார் எழுதி வைத்த உயில் ஆவணத்தில் எத்தனை முத்திரைத்தாள்கள் இருந்தது என்பதை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. அதில் என்ன என்ன சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கோவிலுக்கு அருகே உள்ள இடம். மேற்படி ஆவணத்தில் அந்த இடத்தை தவிர்த்து வேறு ஏதாவது சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளதா என்றால் அவருக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களும் நிறைய உள்ளது. அதை அவரது மகன்களுக்கு பிரித்து கொடுத்தார். அந்த சொத்துக்கள் உயில் ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளதா இல்லையா என்று எனக்கு தெரியாது. இன்று நீதிமன்றத்திற்கு 1 ம் பிரதிவாதி கிளாட்வின் வந்துள்ளார் என்றால் சரிதான். அவர்தான் என்னை அழைத்து வந்தார் என்றால் இல்லை,நான் தனியாக வந்ததேன். தேவதுரை நாடார் கையெழுத்தை பார்த்தால் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பொன்னம்பல நாடார் கையெழுத்தை பார்த்தால் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி 2 பேரும் என்ன உறவு வேண்டும் என்றால் உறவினர்கள். எப்படி உறவு என்றால் துாரத்தில் பெரியப்பா முறை வேண்டும். இதுதான் பொன்னம்பல நாடார் கையொப்பம், இதுதான் தேவதுரை நாடார் கையொப்பம் என்று காட்டக்கூடிய ஆவணம் நான் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–2 ஆவணத்தை நான் அன்றைய தேதியில் பார்த்தேனா என்றால் இல்லை. தேவதுரை நாடார் மற்றும் பொன்னம்பல நாடார் மாதிரி கையொப்பம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. ஞானமுத்து நாடார் எழுதிவைத்ததாக சொல்லும் உயில் ஒரு போலியான ஆவணம் என்றால் சரியல்ல. அதில் தேவதுரை நாடார் மற்றும்

பொன்னம்பல நாடார் கையெழுத்து செய்ததை பார்த்ததாக சொல்வதும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தூண்டுதலின்பேரிலும் அவர்கள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வாதிதரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.